## பரஸ்பர கலந்தாலோசனை (மஷ்வரஹ்)

இங்கே மக்காஹ்விலிருந்து ஹிஜ்ரத் செய்து வந்துள்ள முஸ்லிம்களை மதீனா விலும் நிம்மதியாக வாழவிடவில்லை. மதீனாவாசிகளான அன்சாரிகளுக்கு மிரட்டல்கள் விடப்பட்டன, முஹாஜிரீன்களை மதீனாவிலிருந்து விரட்டிவிடுங் கள் இல்லையெனில் நாங்கள் வந்து உங்களையே மதீனாவிலிருந்து விரட்டி விடுவோம். மதீனாவின் சுற்றுச்சூழல் சூடுபிடிக்க ஆரம்பித்து போருக்கான சூழ்நிலை உருவாகிவிட்டது. சத்தியம் மற்றும் அசத்தியத்திற்கிடையிலான முதன் முதலான முழு அளவிலான போர், பத்ருபோர் மூளும் நிலையில், இந்த பயங்கரமான சூழ்நிலை மற்றும் காலக்கட்டத்திலும் மனிதகுலத்தின் போதனை யாளரும் மாபெரும் சீர்த்திருத்தவாதியுமான ﷺ அவர்கள் நேரடியாகக் கட்டளை அல்லது ஆணையிடுவதற்குப் பதிலாக தன்னுடைய நபித்தோழர்களுடன் ஆலாசனை கலக்கின்றார்கள். நபித்தோழர்கள் ஆலோசனை கூறுகிறார்கள், நாம் பகைவர்களை எதிர்கொள்ளவேண்டும், அதுவும் மதீனாவிற்கு வெளியே சென்று அவர்களை எதிர்கொள்ளவேண்டும். இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித் தோழர்களை தைரியமூட்டுகின்றார்கள். பிரபல நபித்தோழரான ஹஜ்ரத் மிஃக்தாத் பின் அஸ்வத் (ர) அவர்கள் உணர்ச்சிப்பூர்வமான வகையில் கூறுகி றார்கள்: இறைத்தூதரே ﷺ நீங்கள் போருக்கான முடிவை எடுங்கள், நாங்கள் உங்களிடம் மூசா (அ) அவர்களிடம் பனு இஸ்ராயில் மக்கள் கூறியது போல் நீங்களும் உங்கள் இறைவனும் சென்று போரிடுங்கள், நாங்கள் இங்கேயே உட்கார்ந்திருக்கிறோம் என்று கூறமாட்டோம், மாறாக, நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம். இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்களின் ஆலோ சனையை ஏற்றார்கள், போருக்காகப் புறப்படுமாறு ஆணை பிறப்பித்தார்கள்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் நபித்தோழர்களிடம் அவ்வப்போது ஆலோசனை கலந்தார்கள். அவர்கள் போர்க்களத்தை அடைந்தவுடனே இறைத்தூதர் ﷺ அவர்கள் ஓரிடத்தில் தங்கினார்கள். அப்போது ஹஜ்ரத் ஹப்பாப் பின் முன்த்ஜிர் (ர) அவர்கள் முன்வந்து, இறைத்தூதரே ﷺ இங்கே நிலைகொள் வதற்கு அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையில் நிங்கள் கட்டளையிட் டுள்ளீர்களா அல்லது போர் மேற்கொள்வதற்கு ஏற்ற இடம் என்று தங்கள் சொந்தக் கருத்தின் அடிப்படையில் இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்துள்ளீர்களா என்று கேட்டார்கள். அதற்கு அவர்கள் ﷺ அல்லாஹ்வின் கட்டளையின் அடிப்படையில் அல்ல என்னுடைய சொந்தக்கருத்தின் அடிப்படையில் என்று கூறினார்கள். ஹஜ்ரத் ஹப்பாப் பின் முன்த்ஜிர் (ர) அவர்கள் இந்த இடம் பொருத்தமானதல்ல, தண்ணீர்க் குளத்திற்கு அருகில் படைகளை நிறுத்துங்கள் மற்றும் குளத்தின் தண்ணீரைத் தம் கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளுங்கள் என ஆலாசனை கூறினார்கள். இறைத்தூதர் ﷺ அவர்கள் இந்த ஆலாசனை யினை ஏற்றுக்கொண்டார்கள், இதன் காரணமாக, முஸ்லிம்கள் குளத்தின் தண்ணீரைப் பயன்படுத்திக்கொண்டார்கள், நிராகரிப்போருக்குத் தண்ணீர் கிடைக்காமல் போயிற்று. பத்ரு போரில் அல்லாஹ் தஆலா முஸ்லிம்களுக்கு வெற்றியை அளித்தான், 70 கைதிகள் பிடிபட்டனர். அந்த சமயத்திலும் இறைத்

www.uzairalahi.com

தூதர் ﷺ அவர்கள் இந்தக் கைதிகளை என்ன செய்யவேண்டும் என்று நபித் தோழர்களுடன் ஆலோசனை கலந்தார்கள். ஹஜ்ரத் அபூபக்ர் (ர) அவர்கள் அவர்களிடம் பணயத்தொகையைப் பெற்று விட்டுவிடலாம் என்று தன்னுடைய ஆலோசனை கூறினார்கள், ஹஜ்ரத் உமர் (ர) அவர்கள் அனைவரையும் கொன்று விடவேண்டும் என்று தன் கருத்தைத் தெரிவித்தார்கள். ஆனால், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஹஜ்ரத் அபூ பக்ர் (ர) அவர்களுடைய ஆலோசனையை ஏற்று அவர்களிடம் பணயத்தொகைபெற்று அவர்களை விடுதலை செய்தார்கள்.

இதுபோன்றே, ஹஜ்ரத் சுலைமான் (அ) அவர்களுடைய காலத்தில் பில்ஃகீஸ் எனும் இராணி சபா எனும் நாட்டை ஆண்டு வந்தார். அவருடைய தலைசிறந்த அறிவாற்றல், கூர்நோக்கு, அனுபவத்தின் காரணமாக அந்நாட்டு மக்கள் அவரை ஆட்சியில் அமர்த்தினர். சபா நாட்டு மக்கள் சூரியனை வணங்கிவந்தனர். ஹஜ்ரத் சுலைமான் (அ) அவர்கள் அல்லாஹ் ஒருவனே எனும் அடிப்படையில் (தவ்ஹீதின்) அழைப்பினை ஒரு கடிதத்தின் வடிவில் தூதரின் மூலமாக அனுப்பினார்கள். இந்தக் கடிதத்தைப்பெற்றவுடன் சபா நாட்டு இராணி தன்னுடைய மக்களிடம் என்ன கூறினார் என்பதைப்பற்றி திருக்ஃகுர்ஆன் இவ்வாறு கூறுகின்றது.

قَالَتْ يَٰٓأَيُّهَا ٱلْمَلَؤُا۟ إِنِّىٓ أُلْقِىَ إِلَىَّ كِتَٰبٌ كَرِيمٌ ﴿٢٩﴾ إِنَّهُۥ مِن سُلَيْمَٰنَ وَإِنَّهُۥ بِسْمِ ٱللَّهِ ٱلرَّحْمَٰنِ ٱلرَّحِيمِ ﴿٣٠﴾ أَلَّا تَعْلُوا۟
عَلَىَّ وَأْتُونِى مُسْلِمِينَ ﴿٣١﴾ قَالَتْ يَٰٓأَيُّهَا ٱلْمَلَؤُا۟ أَفْتُونِى فِىٓ أَمْرِى مَا كُنتُ قَاطِعَةً أَمْرًا حَتَّىٰ تَشْهَدُونِ ﴿٣٢﴾ (النمل:29-32)

பொருள்: *அரசி கூறினாள், அரசவைப் பிரமுகர்களே, மிக முக்கியமான கடிதம் ஒன்று என்னிடம் போடப்பட்டிருக்கின்றது. அது சுலைமானிடமிருந்து (அ) வந்துள்ளது, அளவிலாக் கருணையும் இணையிலாக் கிருபையுமுடைய அல்லாஹ்வின் திருப்பெயரால் அது தொடங்கப்பட்டுள்ளது, எனக்கு எதிராக நீங்கள் ஆணவத்துடன் நடந்துகொள்ளாதீர்கள், நீங்கள் பணிந்தவர்களாக முஸ்லிம்களாக என்னிடம் வரவேண்டும். மேலும், அரசி கூறினாள், சமுதாயத்தலைவர்களே என்னுடைய இந்த விவகாரத்தில் எனக்கு ஆலோசனை வழங்குங்கள், நீங்கள் ஆலோசனை கூறாமல் எந்த விவகாரத்தையும் நான் முடிவு செய்வதில்லை. (அந்நமல் 29 முதல் 32)*

இவ்வகையில், சபா நாட்டு இராணி தன் நாட்டு அறிஞர்களிடம் ஆலோசனை கலந்துள்ளார் மற்றும் ஹஜ்ரத் சுலைமான் (அ) அவர்களுடைய சபையில் நேரடியாகவே வந்து இஸ்லாத்தை ஏற்றுக்கொண்டுள்ளார். நிச்சயமாக, இது அந்த மஷ்வராவின் பரக்கத்தாலும் அல்லாஹ்வின் அருளாலும் நடந்தேறியுள்ளது.

## ஷூராவின் பொருள்

பரஸ்பர ஆலோசனை கலத்தல் அல்லது மஷ்வரஹ் என்பது ஒரு மனிதன் அனுபவம், கல்வியறிவு, அறிவாற்றல் மிக்கவர்களிடம் ஒரு விஷயத்தில் உண்மை நிலையைக் கண்டறிந்து தெளிவுபடுத்திக்கொள்ள முயற்சிப்பதாகும். மேலும், அவ்விஷயத்தில் தவறான அம்சங்கள் உண்மைக்குப் புறம்பானவற்றைத் தவிர்கும் வகையில் கேட்டறிவதாகும்.

இஸ்லாத்தில் அரசாட்சியின் மூன்று அடிப்படைகள் உள்ளன, நீதி, நியாயம் மற்றும் சமத்துவம், சம உரிமை மற்றும் ஆலோசனை கலத்தல். இதிலிருந்து இஸ்லாமிய ஆட்சியில் ஷூராவின் அந்தஸ்து என்ன என்பது தெளிவாகிறது. திருக்ஃகுர்ஆனில் ஒரு அத்தியாயமே அஷ்ஷூரா என்ற பெயரில் உள்ளது. இந்த ஷூராவின் முக்கியத்துவம் அல்லாஹ் தஆலா தன்னுடைய நபிக்கு ஆலோசனை கலக்குமாறு கட்டளையிட்டுள்ளதிலிருந்து அறியமுடிகிறது. அல்லாஹ் கூறுகிறான்: **(آل عمران: 159)** ﴿وَشَاوِرْهُمْ فِي ٱلْأَمْرِ ۖ ﴾ (١٥٩) பொருள்: *மேலும், தீனுடைய பணிகளில் இவர்களையும் கலந்தாலோசிப்பீராக. (ஆலு இம்ரான் 159)*

பரஸ்பர ஆலோசனை கலத்தலை அல்லாஹ் தஆலா முஃமின்களான விசுவாசிகளின் பண்புகளில் ஒன்றாகக் கூறியுள்ளான் மற்றும் அதனைத் தொழுகை மற்றும் அல்லாஹ்வுக்காக செய்யும் பண்புகளுடன் சேர்த்துக் கூறியுள்ளான். அல்லாஹ் கூறுகிறான்: **(الشورى: 159)** ﴿شُورَىٰ بَيْنَهُمْ﴾ (٣٨) பொருள்: *அவர்கள் தங்கள் காரியங்களை பரஸ்பரம் ஆலோசனை செய்து நடத்துகின்றார்கள். (அஷ் ஷூரா 38)*

**மஷ்வரஹ் எந்தெந்த விஷயங்களில் செய்யவேண்டும்**

எந்த விஷயங்கள் அல்லாஹ் தஆலா மற்றும் அவனுடைய தூதரான முஹம்மத் ﷺ அவர்களுடைய தெளிவான கட்டளைகளும் வழிகாட்டுதல்களும் உள்ளனவோ அவை மஷ்வராவிற்கு உட்படுத்தக்கூடாது, ஏனெனில், ஃகுர்ஆன் மற்றும் ஹதீத்ஃஸில் அவற்றிற்கான கட்டளைகள் இருக்கும்போது அதில் யாருடைய ஆலோசனையும் தேவையில்லை. இறைத்தூதர் ﷺ அவர்கள் சமூகத்தில் எழும் பிரச்சினைகளில் எதுவரை அவ்விஷயத்தில் அல்லாஹ்வின் கட்டளை வஹீ மூலம் வரவில்லையோ அதுவரை நபித்தோழர்களிடத்தில் தொடர்ந்து ஆலோசனை கலப்பது வழக்கம். எப்போது வஹீ மூலம் கட்டளை வருமோ அதனை உடனே அமல்படுத்திவிடுவார்கள். ஹஜ்ரத் அபூ ஹுரைரஹ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், நான் இறைத்தூதர் ﷺ அவர்களைவிட அதிகமாக தம் தோழர்களிடம் ஆலோசனை கலப்பவர்கள் யாரையும் பார்த்ததில்லை.

**ஷூ ராவின் சிறப்பு**

யார் மற்றவர்களிடம் ஆலோசனை கலப்பார்களோ அவர்கள் எப்போதும் வெட்கப்படும் நிலைக்கு ஆளாகமாட்டார்கள். அல்லாஹ் அவரை நன்மை மற்றும் நல்லவற்றிற்கெல்லாம் வழிகாட்டி உண்மையை வெளிப்படுத்துகிறான். இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறுகிறார்கள்:

مَنْ أَرَادَ أَمْراً فَتَشَاوَرَ فِيْهِ امْرَأً مُسْلِماً وَفَّقَهُ اللهُ لِأَرْشَدِ أُمُورِهِ

பொருள்: *யார் ஒன்றைச் செய்ய எண்ணி அதனைப்பற்றி ஒரு முஸ்லிம் சகோதரரிடம் ஆலோசனை கலந்தால் அல்லாஹ் அவருக்கு அதனைச் சரியான முறையில் செய்யவைக்கிறான் (தபரானி).* மஷ்வரஹ்வே உண்மையான நேர்வழியாகும், மன உறுதி மற்றம் எச்சரிக்கையான நிலை அத்துடனேயே இணைந்திருக்கிறது. இதன் காரணமாக, அதன் செயல்பாட்டில் அழகும் அதனை நிறைவேற்றுவதில் உறுதிப்பாடும் உண்டாகிவிடுகிறது. ஆலோசனை கலப்பதன் மூலம் ஒரு

www.uzairfalahi.com

மனிதன் மற்றவர்களுடைய அனுபவத்தில் பலனைப்பெறுகிறான் மற்றும் அவர்களுடைய அறிவாற்றல் மற்றும் பக்குவத்தின் சிறப்பம்சங்களைப் பயன்படுத்திக் கொள்கிறான். இந்த மஷ்வரஹ்தான் மனிதனை ஒருதலைபட்சமாகச் செயல்படுவதிலிருந்து பாதுகாக்கின்றது மற்றும் எண்ணற்றக் குறைபாடுகளை நீக்கி விடுகிறது மற்றும் மனிதனை உண்மையின் பாதையில் வழிநடத்திச்செல்கிறது.

## இஸ்திக்ஹாரா

ஒரு மனிதன் தன்னுடைய விஷயங்களில் சிந்தனையாளர்கள் மற்றும் அறிவாற்றல் மிக்கவர்களிடம் அலோசனை கலக்கும் நியைில் அல்லாஹ்விடம் ஆலோசனைபெற அணுகுவது மிகவும் உகந்ததாகும், ஏனெனில், அவன் தான் நேர்வழியின் மூலமுதலாகவும் நேரான வழியினை மேற்கொள்ளும் பாக்கியத்தையும் அளிப்பவன். ஆகவே, ஒரு முஸ்லிமுடைய எந்த ஒரு வேலையும் சீர்கெடும் நிலையிலும் பிரச்சினைகள் எழும் நிலையிலும், அதற்கான தீர்வுகாண முடியாத நிலையிலும் அவர் உடனே அல்லாஹ்வின் உதவியை நாடவேண்டும். இதற்கான வழிமுறைகளை இறைத்தூதர் ﷺ அவர்கள் நமக்குக் காண்பித்துள்ளார்கள். இதற்காக இரண்டு ரகஅத்து தொழுகையை நிறைவேற்றி அல்லாஹ்விடம் ஆலோசனை கேட்கும் வகையில் முற்படவேண்டும். கீழ்க் காணும் துஆ இறைத்தூதர் ﷺ அவர்கள் வாயிலாக அறிவிக்கப்பட்டுள்ளது:

**اللّهُمَّ إِنِّيْ أَسْتَخِيْرُكَ بِعِلْمِكَ وَأَسْتَقْدِرُكَ بِقُدْرَتِكَ وَأَسْأَلُكَ مِيْ فَضْلِكَ الْعَظِيْمِ فَإِنَّكَ تَقْدِرُ وَلاَ أَقْدِرُ وَتَعْلَمُ وَلاَ أَعْلَمُ وَأَنْتَ عَلاَّمُ الْغُيُوْبِ. اللّهُمَّ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ خَيْرٌ لِّيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةَ أَمْرِيْ ـ أَوْ قالَ عَاجِلِ أَمْرِيْ وَآجِلِهِ ـ فَاقْدُرْهُ لِيْ وَيَسِّرْهُ لِيْ ثُمَّ بَارِكْ لِيْ فِيْهِ. وَ إِنْ كُنْتَ تَعْلَمُ أَنَّ هَذَا الأَمْرَ شَرٌّ لِّيْ فِيْ دِيْنِيْ وَمَعَاشِيْ وَعَاقِبَةَ أَمْرِيْ ـ أَوْ قالَ عَاجِلِ أَمْرِيْ وَآجِلِهِ ـ فَاصْرِفْهُ عَنِّيْ وَاصْرِفْنِي عَنْهُ واقْدُرْ لِيْ الْخَيْرَ حَيْثُ كَانَ ثُمَّ أَرْضِنِيْ.**

பொருள்: *இறைவா, நான் உன்னுடைய ஞானத்தின் உதவியால் பயன்பெற நாடுகிறேன், உன்னுடைய பேராற்றலின் உதவியால் எனக்கு ஆற்றல் அளிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன். நான் உன்னிடத்தில் உன்னுடைய பேரருளைக் கேட்கின்றேன், நிச்சயமாக நீதான் ஆற்றல் படைத்தவன், எனக்கு எந்த ஆற்றலும் கிடையாது, நீதான் எல்லாம் அறிந்தவன், நான் எதையும் அறியவில்லை. நீதான் மறைவானவற்றையெல்லாம் அறிபவன். இறைவா, இந்தச் செயல் (உங்கள் பிரச்சினை இங்கே முன்வைத்துக்கூற வேண்டும்) என்னுடைய மார்க்கம், என்னுடைய வாழ்க்கை மற்றும் அதன் விளைவுகளின் அடிப்படையில் இவ்வுலகத்திலும் மறுமையிலும் சிறந்ததாக இருக்கும் என்று நீ அறிவாயானால் இந்தச் செயலை எனக்கு நன்மையானதாக ஆக்கிவிடு மேலும் இதனை எனக்கு இலேசானதாக ஆக்கிவை, இதில் எனக்கு அருள்புரிவாயாக. மேலும் இந்தச் செயல் என்னுடைய மார்க்கம், என்னுடைய வாழ்க்கை மற்றும் அதன் விளைவுகளின் அடிப்படையில் இவ்வுலகத்திலும் மறுமையிலும் கேடானதாக இருக்கும் என்று நீ அறிவாயானால் இதனை என்னைவிட்டு அப்புறப்படுத்தி விடு, நன்மையானவை எங்கிருந்தாலும் அதனை எனக்கு அளித்துவிடு மேலும் இச்செயலைக்கொண்டு என்னோடு பொருந்திவிடு* (புக்ஹாரி).

* * *